# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2022-2023-ம் நிதி ஆண்டு அறிக்கை

## (Annual Report)

### 1. குழுவின் அமைப்பு

அரசாணை (எம்.எஸ்) எண்.57, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.19.05.2017, அரசாணை (எம்.எஸ்) எண்.90, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.27.07.2017 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்.81, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.14.08.2018-ன்படி உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண்.764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையானது கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டு, இவ்வறக்கட்டளையானது ஆவண எண்.119/2017/BK4, நாள்.21.09.2017-ன்படி தல்லாகுளம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் அரசாணை எண்.35, தொழில் (எம்எம்டி.1) துறை, நாள்.11.03.2022-க்கிணங்க, மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.578/கனிமம்/2022, நாள்.03.11.2022-ன்படி கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு மறுசீரமைக்கப்பட்டு தல்லாகுளம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.260/2022/BK4, நாள்.02.12.2022-ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை | 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை |
| 3. | துணை / உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. | 3. | துணை / உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. |
| 4. | பாராளுமன்ற உறுப்பினர்கள்.<br>i. திரு.S.வெங்கடேசன், மதுரை<br>ii. திரு.B.மாணிக்கம் தாகூர், விருதுநகர்<br>iii. திரு.P.ரவீந்திரநாத், தேனி | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை |
| 5. | சட்டமன்ற உறுப்பினர்கள்.<br>i. திரு.P.மூர்த்தி, மதுரை கிழக்கு | 5. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை |

| | | | |
|---|---|---|---|
| | ii. திரு.P.T.R.பழனிவேல் தியாகராஜன், மதுரை மத்தி<br>iii. திரு.G.தளபதி, மதுரை வடக்கு<br>iv. திரு.M.பூமிநாதன், மதுரை தெற்கு<br>v. திரு.K.ராஜீ, மதுரை மேற்கு<br>vi. திரு.A.வெங்கடேசன், சோழவந்தான்<br>vii. திரு.R.B.உதயகுமார், திருமங்கலம்<br>viii. திரு.V.V.ராஜன் செல்லப்பா, திருப்பரங்குன்றம்<br>ix. திரு.பெரியபுல்லான் @ செல்வம், மேலூர்<br>x. திரு.P.அய்யப்பன், உசிலம்பட்டி | | |
| 6. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | 6. | முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை |
| 7. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (வளர்ச்சி), மதுரை | 7. | மாவட்ட கருவூல அலுவலர், மதுரை |
| 8. | உதவி இயக்குநர் (பேரூராட்சி), மதுரை | 8. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை |
| 9. | மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர், மதுரை | 9. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), மதுரை |
| 10. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மதுரை | 10. | தி/ள். வாய்ஸ் டிரஸ்ட், தரைத்தளம், மாவட்ட ஆட்சியர் வளாகம், மதுரை |
| 11. | மாவட்ட வன அலுவலர், மதுரை | 11. | திரு. S. மலைச்சாமி, 3/423 - 4வது தெரு, ராயல் கார்டன், கருப்பாயூரணி, மதுரை - 625020 |
| 12. | முதன்மைப் பொறியாளர், பொ.ப.து, நீ.ஆ.அ, மதுரை | | |
| 13. | உதவி இயக்குநர், நில அளவை, மதுரை | | |
| 14. | மாவட்ட கருவூல அலுவலர், மதுரை | | |
| 15. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை | | |
| 16. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை | | |
| 17. | இணை இயக்குநர், (வேளாண்மை), மதுரை | | |
| 18. | தொழிலாளர் ஆய்வாளர், மதுரை | | |

## 2. நிதிநிலை அறிக்கை

மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, பாரத ஸ்டேட் வங்கி, வணிகவரி அலுவலக கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண். 37193268816) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளைக்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 16 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும், 54 சிறு கனிம குவாரி (95 கிரானைட் குவாரிகள் நீங்கலாக) குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள 16 பெருங்கனிம உரிமங்களும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இசைவு பெற்று சமர்ப்பிக்காத காரணத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பிலுள்ள 54 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகை கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக **31.03.2023** வரை **ரூ.5,65,75,858/- (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்து ஐந்து இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து எட்டு மட்டும்)** வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதில் 2022-2023 ஆண்டிற்கு மட்டும் **ரூ.1,16,36,061/- (ரூபாய் ஒரு கோடியே பதினாறு இலட்சத்து முப்பத்து ஆறாயிரத்து அறுபத்து ஒன்று மட்டும்)** கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | மாதம் | அறக்கட்டளை நிதி (ரூபாயாக) |
|---|---|---|
| 1) | ஏப்ரல்-2022 | 11,64,461 |
| 2) | மே-2022 | 13,34,380 |
| 3) | ஜீன்-2022 | 10,95,959 |
| 4) | ஜீலை-2022 | 9,16,523 |
| 5) | ஆகஸ்ட்-2022 | 10,86,251 |

| | | |
|---|---|---|
| 6) | செப்டம்பர்-2022 | 7,60,359 |
| 7) | அக்டோபர்-2022 | 6,84,200 |
| 8) | நவம்பர்-2022 | 8,16,704 |
| 9) | டிசம்பர்-2022 | 10,40,693 |
| 10) | ஜனவரி-2023 | 7,84,348 |
| 11) | பிப்ரவரி-2023 | 10,09,094 |
| 12) | மார்ச்-2023 | 9,43,089 |
| | மொத்தம் | **1,16,36,061** |

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதி கணக்கில் 31.03.2023 வரை வரவு வைக்கப்பட்ட தொகை, செலவு செய்யப்பட்ட தொகை மற்றும் இருப்பில் உள்ள தொகை தொடர்பான விபரங்கள் கீழ்க்கண்டவாறு.

மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கிக் கணக்கு எண். 37193268816

| 01.04.2022 அன்று இருப்பில் உள்ள தொகை | 01.04.2022 முதல் 31.03.2023 வரை வரவு வைக்கப்பட்ட தொகை | வங்கிக் கட்டணம் திரும்ப வரப்பெற்ற தொகை | நிர்வாக செலவினங்-களுக்கான வங்கிக் கணக்கு மாற்றம் செய்யப்பட்ட தொகை | வங்கி கட்டணம் பிடித்தம் செய்யப்பட்ட தொகை | 01.04.2022 முதல் 31.03.2023 வரை திட்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட தொகை | 31.03.2023 அன்று இருப்பில் உள்ள தொகை |
|---|---|---|---|---|---|---|
| **3,71,16,688** | **1,16,36,061** | **38,203** | **7,34,862** | **177** | **50,00,000** | **4,30,55,913** |

மாவட்ட கனிம அறக்கட்டளை நிர்வாக செலவினங்களுக்கான வங்கிக் கணக்கு எண். 39383933861

| 01.04.2022 அன்று இருப்பில் உள்ள தொகை | 01.04.2022 முதல் 31.03.2023 வரை வரவு வைக்கப்பட்ட தொகை | வங்கி வட்டித் தொகை வரப்பெற்ற தொகை | வங்கி கட்டணம் பிடித்தம் செய்யப்பட்ட தொகை | 01.04.2022 முதல் 31.03.2023 வரை செலவு செய்யப்பட்ட தொகை | 31.03.2023 அன்று இருப்பில் உள்ள தொகை |
|---|---|---|---|---|---|
| **4,96,507** | **7,34,862** | **19,851** | **88.5** | **3,24,701** | **9,26,430.5** |

3. நடப்பு நிதியாண்டில் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டம்

2022-2023-ம் நிதியாண்டில் முதன்மை கல்வி அலுவலர், மதுரை அவர்களிடமிருந்து நரசிங்கம் பஞ்சாயத்தில் உள்ள பெண்கள் மாதிரி பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.75,00,000/- (ரூபாய் எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) திட்டம் 13.12.2022 அன்று நடைபெற்ற குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. இந்நிலையில் மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள் 2017-ன் விதி எண்.16(4)-ன்படி ஒரு நிதியாண்டில் ரூ.50,00,000/- வரையிலான திட்டப் பணிகளுக்கு மட்டுமே மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஏற்பளிப்பு செய்ய இயலும் என்பதால் தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண். 578/கனிமம்/2022, நாள்.01.12.2022-ன்படி ரூ.75,00,000/- (ரூபாய் எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதலும், அதிலிருந்து ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்புதலும் திட்ட இயக்குநர் / கூடுதல் ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டப் பணிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு வழங்க வேண்டிய தொகையான ரூ.25,00,000/-(ரூபாய் இருபத்து ஐந்து லட்சம்)-ஐ வழங்குவது தொடர்பாக ஆணையர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கிண்டி, சென்னை-32 அவர்களிடம் கருத்துரு அனுப்பப்பட்டது.

4. நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை

இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களின் நேர்முக கடிதம் ந.க.எண்.3946/LC/2015, நாள்.17.03.2020-ன்படி ஒவ்வொரு மாதமும் வசூல் செய்யப்படும் தொகையில் நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட 6% தொகையை தனி வங்கி கணக்கிற்கு மாறுதல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கி கணக்கு தொடங்கிய நாள் 26.09.2017 முதல் 31.03.2023 வரை நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டது போக மீதமுள்ள **தொகை ரூ.20,25,507/- (ரூபாய் இருபத்து இலட்சத்து**

இருபத்து ஐந்தாயிரத்து ஐநூற்று ஏழு மட்டும்) தனி வங்கி கணக்கிற்கு (மாநில பாரத வங்கி, வணிகவரி வளாக கிளை, சேமிப்பு கணக்கு எண்.39383933861) மாற்றப்பட்டுள்ளது.

5. மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளைப் பணிகளை மேற்கொள்ள தற்காலிக ஊழியர்கள் நியமனம்.

மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளைப் பணிகளை செவ்வனே செய்திடவும், கணினியில் தட்டச்சு செய்திடவும் தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.790/டிஎம்எப்டி/2021, நாள்.28.12.2021 மற்றும் 578/டிஎம்எப்டி/2022, நாள்.28.11.2022-ன்படி தலா பதினோரு மாத காலத்திற்கு இரண்டு தரவு நுழைவு செய்பவர்கள் (Data Entry Operators) தற்காலிக நியமனம் செய்யப்பட்டது. அவர்களுக்கு ஊதியமாக ரூ.3,24,701/- (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்து நான்காயிரத்து எழுநூற்று ஒன்று மட்டும்) ஊதியமாக வழங்கப்பட்டது.

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

27/11/24

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.

27/11/2024

27/11/24

27/11/24